விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 மாசி 9 ஷஃபான் 5 இதழ்: 11
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 21-2-1991

## தமிழ்க் குழுக்களை விடுவிக்க ராஜீவ், தேவிலால் முயற்சி

(கொழும்பு)

தமிழகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களில் புலிகளைத் தவிர்ந்த ஏனைய தமிழ்க்குழுக்களைச் சேர்ந்த 1,280 பேரும் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளார்கள். காங்கிரஸ் தலைவர் திரு. ராஜீவ்காந்தியும், இந்திய துணைப்பிரதமர் திரு. தேவிலா

(4-ம் பக்கம் பார்க்க)

## 3 இராணுவம் பலி

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவின் வடக்கே புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் 3 இராணுவத்தினர் உயிரிழந்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [அ]

## மாகாணசபைக்கு மீண்டும் உயிரூட்ட முயற்சி

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு மீண்டும் உயிரூட்டி அதனைச் செயற்பட வைப்பதற்கான தீவிர முயற்சி கொழும்பில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

வங்காலை இராணுவத்தால்

# ஏழு தமிழ்பாடசாலை அதிபர்கள்

# சுட்டும், வெட்டியும் கொலை!

## பணமும் கொள்ளை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு தமிழ்ப் பாடசாலைகளின் அதிபர்கள், வங்காலை இராணுவத்தால் சுட்டும், வெட்டியும் கொலை செய்யப்பட்டுள்ளனர். கடந்த 17ம் திகதி நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை ஆசிரியர்களுக்கான சம்பளப் பணத்தை மன்னார் கல்வித் கந்தோரில் கடந்த சனிக்கிழமை எடுத்துக்கொண்டு ஞாயிறு வங்காலை இராணுவ முகாம் வந்தபோது ஏழு அதிபர்களும் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டபின் சுட்டும், வெட்டியும் கொலை செய்யப்பட்டனர்.

இவர்கள் கொண்டுவந்த பல லட்சம் ரூபா சம்பளப்பணமும் கொள்ளையடிக்கப்பட்டிருக்கலாமெனவும் கூறப்படுகிறது. இவர்களில் முருங்கன் அரசகிறிஸ்தவ ம. வி. அதிபரின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது ஏனைய ஆறு அதிபர்களதும் முழு விபரங்களும் இதுவரை

(4ம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் கைதான 15 பேரை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

மன்னார் வங்காலை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பொதுமக்களில் 15பேர் காணாமற்போய்விட்டதாக வந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார், பன்றுமனை, பண்டிவிரிச்சான், அடம்பன், விடத்தல்தீவு போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களே காணாமற் போயுள்ளனர்.

இவர்களை வங்காலை இராணுவத்துடன் இணைந்து செயற்படும் முஸ்லிம் ஊர் காவற் படையினரும் சேர்ந்து கைதுசெய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது மேலும் 250பேர் இவர்களால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் (56)

## சர்வஜன வாக்கெடுப்பிற்கு இந்தியா ஆதரவளிக்கும்?

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதை இந்தியா ஆதரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் கொழும்பிற்கு விஜயம்செய்த இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. வி. சி. சுக்ளா அனைத்துக்கட்சி பிரதிநிதிகளையும் சந்தித்தபோது இதுபற்றிக் கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களிடமும் திரு சுக்ளா இதுபற்றிக் கூறியுள்ளார். (இ)

## புதிய முகாம்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் உள்ள வெருகல், ஈச்சிலம்பற்றை ஆகிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவம் புதிய முகாம்களை அமைத்துள்ளதாகத் தெரியவருகிறது

ஒலிமுவ, கல்லாறுப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரே மேற்படி முகாம்களை அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது (வி)

## வடக்கு- கிழக்கில் யுத்தம் 10 வருடம் நீடிக்கும்?

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் 10 வருடங்களுக்கு யுத்தம் தொடர்ந்து நீடிக்கும் சாத்தியம் இருக்கிறதா? என்ற கேள்விக்கு திரு. ரஞ்சன் விஜயரத்ன பதிலளித்திருக்கிறார்.

இந்தக் கால அளவு பற்றித் தாம் எதுவும் கூறப்போவதில்லை என்றும், எனினும் தமது கால அளவுக்கு யுத்தம் நடக்கும் என்றும் பத்திரிகையாளரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார். (இ)

## அமெரிக்க, நேச நாடுகளில் இலங்கை உதவி கோரும்

(கொழும்பு)

அமெரிக்க, நேச நாடுகளிடமிருந்து உதவிகளைப் பெற இலங்கை முயன்று வருகிறது.

இந்த உதவிகள் இராணுவ தளபாடங்கள் சம்பந்தப்பட்டவையல்ல என அரசு கூறியுள்ளதாக 'சண்டே ஒப்சேவர்' தெரிவித்துள்ளது.

இந்த நோக்கங்களுக்காகவே பல்தேசப் படைகளுக்கு எண்ணெய் நிரப்ப, இலங்கை அனுமதி அளித்ததாகவும் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (இ)

## இராணுவம் மீது தாக்குதல் பலர் பலி; பலர் காலிழப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பேசாலையில் ஒலைத்தொடுவாயிலில் நேற்றுக்காலை இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இரு சடலங்களையும் புலிகள் மீட்டுள்ளனர். பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டது.

மட்டக்களப்பில் நேற்றுக் காலை ஏறாவூரில் முஸ்லிம் ஊர்காவல் படையினர் அரவ

(4ம் பக்கம் பார்க்க)

## மட்டு. மாவட்டத்தில் 2,800 தமிழர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 2,800 க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர் கொல்லப்பட்டுள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## படையினரை கலக்கும் 'குமரப்பா - 5000'

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் 'குமரப்பா-5000' படையினருக்கு பெரும் சிம்மசொப்பனமாய் இருப்பதாக கொழும்பு வட்டாரங்களில் கூறப்படுகிறது. பசிலின்-2000, குமரப்பா-5000 முகாம்கள் மீது வீழ்ந்து தாக்கும்போது பெருமளவு

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**ஆனந்தா கலண்டர் - 1991**

ஆங்கில தமிழ் திகதிகள், அமாவாசை, பூரணை, அட்டமி, நவமி, ஏகாதசி, சதுர்த்தி, சஷ்டி, பிரதோஷம், கார்த்திகை மற்றும் அரசாங்க வங்கி விடுமுறை விபரங்கள் அடங்கியது இப்போது விற்பனையாகிறது. விலை ரூபா 22/- விற்பனையாளருக்கு கழிவுண்டு. ஆனந்தா புத்தகசாலை, 226, கே. கே. எஸ். வீதி, யாழ. (சி-4371)


## கத்திக்குத்துக்கு இலக்கானார்

(யாழ்ப்பாணம்)

தனிப்பட்ட பகைமை காரணமாக ஏற்பட்ட தர்க்கத்தில் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் கந்தரோடையை சேர்ந்த பெ. தெய்வேந்திரராசா [வயது 25] என்பவரே தனதுவீட்டிற்கு அண்மையில் கத்திக்குத்துக்கு இலக்கானார். இவர் அண்மையில் திருமணமானவர். (56)

## திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் பரிசாரகராகக் கடமையாற்றிவரும் ப. சோதிராஜா என்பவரின் 6000 ரூபா பெறுமதியான ரேப்றெக்கோடர் தொழிலாளர் ஒய்வு விடுதியில் திருட்டுப்போயுள்ளது.

இதுகுறித்து பணிப்பாளரிடமும், விடுதலைப்புலிகளிடமும் அவர் முறையிட்டுள்ளார். (56)

## பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் 1988 ஆம் ஆண்டு ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சையின் இறுதிப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கணிதம், விஞ்ஞானம், விவசாயம் ஆகிய பிரிவுகளின் பெறுபேறுகளே வெளியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

## முதுமாணியில் சித்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக முதுமாணி (கல்வி) பரீட்சையில் திருமதி ரி. இராசரத்தினம் சித்தியடைந்துள்ளார்.

முதுமாணி (புவியியல்) பரீட்சையில் திரு. எஸ். பாக்கியராஜா சித்தியடைந்துள்ளார். (153)

## கல்வியமைச்சு சுற்றறிக்கை

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களுக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சையில் சித்தியடையாதவர்களின் மேன்முறையீடுகளை விசாரித்து அதன் விபரத்தை தமக்கு அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சு கல்வி திணைக்களங்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் இந்த நேர்முகப் பரீட்சை அடுத்த மாதளவில் நடைபெறலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (152)


# இரத்தம் தேவை

உடனடியாக ஏ நெகடிவ் ('A' NEGATIVE) இரத்தம் தேவைப்படுகிறது.

தொடர்பு கொள்ளவும்:

**அ. பரமநாதன்**
தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை
330, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம்.

(சி 4373)



## சாவகச்சேரி துர்க்காதேவி தேவஸ்தானம்
# மாசிமக இலட்சார்ச்சனை விழா

அம்பிகை அடியார்களே!

மேற்படி தேவஸ்தானத்தில் 19-2-91 செவ்வாய்க்கிழமை முதல் இலட்சார்ச்சனை ஆரம்பித்து பத்து நாட்கள் நடைபெற்றுவருகின்றது. காலையில் 7மணிக்கு ஆரம்பித்து 9 மணிக்கு முடிவடையும் பிற்பகல் 3-30 மணிக்கு ஆரம்பித்து 5 மணிக்கு முடிவடையும். பூர்த்தி தினமாகிய 28-2-91 வியாழக்கிழமை மாசி மகத்தன்று 10-ம் நாள் காலை 108 சங்காபிஷேகமும் மாலை இலட்சார்ச்சனையுடன் மாசிமக விழா பூர்த்தியடையும்.

அனைவரும் வருக அன்னை அருள் பெறுக!

இங்ஙனம்
தர்மகர்த்தா
ப. மகாகணபதி சர்மா

(சி-4372)



# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வி மேகலா பசுபதி

மண்ணுலகில்: 01-09-67 விண்ணுலகுக்கு: 13-03-90

1ம் ஆண்டு திதி: 21-02-91

ஓ எம் இனிய கலா
நீ...............
அன்பு மொழியில்
அடங்கும் பாவை
பண்பு வழியில்
பழகும் பைங்கிளி
தெம்புடன் பாதையில்
துணிவுடன் நின்ற
எம் இனிய கலாவே
எண்ணரும் பொழுதில்
எமைப் பிரிந்து ஏனோ
தேம்ப எமை வைத்து விட்டாய்
கண்கள் நீரின்றிக்
காய்ந்து விட்டன - கலா
நாவும் உனை எண்ணி
உன் கதைகள் சொல்லி
சோர்ந்து விட்டன எம்கலா
மாறும் ஒன்று உன்பிரிவு - எம் கலா
ஆறுதல் எமக்கு யார் கூறுவார்?

தந்தை, சகோதர சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

காரதியூர்,
புலோலி தெற்கு.

(சி-4370)



# நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

## 92 A/L
## பொருளியல்

கேள்விக்கோட்பாடு

ஆரம்பம்: 21-02-91
மாலை - 3 மணி
திரு. உதயன்

(எ-1111)



வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை.

# தொழிலாளர் கல்விப் பாடநெறி - 1991.

ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும் ஆண்டு 9 (தரம் 8) கல்வித் தகைமையும் கொண்ட அரசாங்க / அரச கூட்டுத்தாபன / தனியார் நிறுவனங்களில் அல்லது சுய தொழிலில் (விவசாயம், மீன்பிடி, மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட) ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான தொழிலாளர் கல்விப் பாடநெறிக்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன,

விண்ணப்பப்படிவத்தையும் மேலதிக விபரங்களையும் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் ரூபா 15/-க்கான காசுக்கட்டளையை நேரில் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது சுயவிலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ. மீ X 10 செ. மீ அளவினதான கடித மேலுறையுடன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ தேர்வுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, என்ற முகவரிக்கு தபால்மூலம் அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம் விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி 13-03-1991;

பாடநெறியிற் பங்குபற்றுவோர் எழுத்துத்தேர்வு ஒன்றுக்கூடாகவும் நேர்முகத்தேர்வு ஒன்றுக்கூடாகவும் தெரிவு செய்யப்படுவர்.

எழுத்துத்தேர்வு 23-03-1991 சனிக்கிழமை மு. ப. 9-00 மணிக்கு நடைபெறும்;

குறிப்பு.

பத்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உடையவர்களிடமிருந்து ஆண்டு 9இலும் குறைவான கல்வித் தகைமையுடனும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவாளர்.

(எ-1112)

# பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் நோயாளரின் உணவுப்பொருட்கள் திருட்டு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் இடம்பெற்றுவந்த நோயாளர்களின் உணவுப்பொருட்கள் திருட்டு சம்பவம் ஒன்று அம்பலத்திற்கு வந்துள்ளது. நோயாளர்களின் உணவுப்பொருட்கள் திருடப்படுவதாக நோயாளர்களால் பலத்த புகார்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

கடந்த 16ம் திகதி பகல் வைத்தியசாலை உணவுதயாரிக்கும் பகுதியிலிருந்து களவாடப்பட்டு, கடத்தப்பட்ட தேங்காய்கள், காய்கறிவகைகள் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி உடமராட்சி நீதி நிர்வாகம் பொறுப்பாளரினால் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட உணவுப் பொருட்கள் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரால் வைத்தியசாலை நிர்வாகத்திடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டதுடன், இந்நோயாளர்களின் உணவுப்பொருட்கள் திருட்டுச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகத்தை வேட்டுள்ளது.

நோயாளர்களின் உணவுப் பொருட்களுடன் அகப்பட்டுக் கொண்ட சிறுவன் ஒருவன் விடுதலைப் புலிகளுக்கு கொடுத்த வாக்குமூலத்தில் தான் கொண்டுவந்த உணவுப் பொருட்களை தனது உறவினர் ஒருவர் தன்னிடம் தந்து, வீட்டில் கொடுக்குமாறு கூறியதாகவும் தான் கொண்டுவந்த போது விடுதலைப் புலிகளிடம் அகப்பட்டு கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (52)

# கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை ஒழுங்கீனம் விசாரணைக்கு குழு நியமனம்

(யாழ்ப்பாணம்)

1988-ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தகுதிவாய்ந்தவர்களை இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ம் தரத்தில் இருந்து மேற்படி சேவையின் II-ம் தரத்திற்குத் தெரிவு செய்வதற்காக நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் நடைபெற்ற ஒழுங்கீனத்தை பற்றி ஆராய்வதற்காக அரசாங்க சேவை கல்வி ஆணைக் குழுவின் உறுப்பினர் திரு. க. ஜெயக்குமார் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குழுவிடமிருந்து நிவாரணம் பெற விரும்புபவர்கள் இம்மாதம் 28-ம் திகதிக்கு முன்பாக எழுத்து மூலமான தமது முறையீடுகளைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகிறார்கள். (153)

# யாழ்ப்பாண பாடசாலைகளில் அனுமதியில் கஷ்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரப் பகுதியிலுள்ள கல்லூரிகளிலும் மற்றும் ஆரம்ப பாடசாலைகளிலும் சகலதர வகுப்புக்களுக்கும் மாணவர்களுக்கு அனுமதி பெறுவதில் பெற்றோர்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியதாக உள்ளது.

இராணுவநடவடிக்கையால் இடம்பெயர்ந்தும், பாதிக்கப்பட்டுமுள்ள மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதிலேயே முன்னைய காலங்களை விட தற்போது சகல பாடசாலை அதிபர்களுக்கும் சங்கடமானநிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை, தளபாடங்கள் வசதியின்மை, மேலதிக வகுப்புக்களை உருவாக்குவதற்குரிய இடவசதியின்மை, விமானத் தாக்குதல்களால் சேதமுற்ற கட்டிடங்களைத் திருத்த முடியாதநிலை போன்ற இக்கட்டான சூழலில் அதிபர்கள், பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். அப்படியிருந்தும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு முடிந்தளவில் அனுமதி கொடுப்பதை காணக்கூடியதாகவுள்ளது. (56)

# பன்முக வரவு செலவு திட்டங்கள் பற்றி ஆராய நால்வர் குழு நியமனம்

(யாழ்ப்பாணம்)

1991ம் ஆண்டு பன்முக வரவுசெலவு நிகழ்ச்சித் திட்டம் சம்பந்தமாக யாழ் மாவட்ட உள்ளூர்த்திணைக்கள தலைவர்களிடமிருந்தும், உதவி அரச அதிபர்களிடமிருந்தும் பெறப்பட்ட உத்தேசத் திட்டங்களை ஆராய்வதற்கென யாழ். அரச அதிபரால் நால்வர்கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படிகுழு திணைக்கள தலைவர்களையும், பிரிவு உதவி அரச அதிபர்களையும் குழுக் கூட்டத்திற்கு அழைத்து ஆராய்ந்தபின் செயற்படுத்தக்கூடிய திட்டங்களை 3 கிழமைக்குள் யாழ் அரச அதிபரிடம் சமர்ப்பிக்கவுள்ளது. (153)

# நாய்களுக்கு தடுப்பு ஊசி

(உடுவில்)

உடுவில் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் உள்ள பல்வேறு இடங்களில் விசர்நாய் கடி தடைமருந்து நாய்களுக்குப்போடப்பட உள்ளன.

இச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களை, தவறாது குறிக்கப்பட்ட திகதிகளில் அவ்அவ் விடங்களுக்கு எடுத்துச்சென்று விசர்நாய் எதிர்ப்பு ஊசியினை (ஏ.ஆர்.வீ.) போட்டுக்கொள்ளுமாறு நாய்வளர்ப்போருக்கு உடுவில் பொதுசுகாதாரப் பரிசோதகர் திரு கு. சிவபாலராசா அறிவித்துள்ளார்.

மார்ச் 4ம் திகதி தாவடியிலும், மார்ச் 5ம் திகதி இணுவிலிலும், மார்ச் 6ம்திகதிஉடுவிலிலும் மார்ச் 7ம்திகதி சங்குவேலியிலும் நாய்களுக்கான தடுப்பூசிபோட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. [109]

# 2 லீற்றர் மண்ணெண்ணை நீர்வேலியில் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் நேற்றுமுன்தினம் ஆய்வு நிறுவனத்தினரின் உதவியுடன் மண்ணெண்ணெய் விநியோகம் நடைபெற்றது.

ஒருவருக்கு தலா இரண்டு லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.

விவசாய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் முன்கூட்டியே இந்நிறுவனத்தில் பெயர்களைப் பதிவு செய்தவர்களுக்கு மாத்திரமே மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஈ)

# திருட்டு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை - மாத்தனைப் பகுதியில் இரவுநேரங்களில் ஆடு, மாடு, கோழி, வீட்டுத் தளபாடங்கள் ஆகியவை தினமும் திருட்டுபோய்க் கொண்டிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் சுமார் இரண்டு மாதங்களாக திருடர்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது. (56)

# வாழைக்குலை திருடியவர் புலிகளிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை, கிழக்கு தையப்புலம், அம்பனைப் பகுதிகளில் உள்ள வீடுகளில் வாழைக்குலை, தேங்காய் ஆகியன திருட்டுப்போகின்றன.

மக்கள் இவ்விடங்களில் வசிக்காததாலும், இடம் பெயர்ந்திருப்பதாலும் திருடர்களுக்கு வசதியாகப்போய் விட்டது.

சில தினங்களுக்கு முன்பு ஒருவர் வாழைக்குலையுடன் பொதுமக்கள் டம்கையும்மெய்யுமாகச் சிக்கியதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஈ)

# இராசிபலன்

21-02-1991

வியாழக்கிழமை

மேஷம்: தற்பெருமை. அரசியல் ஞானம். தொழில் லாபம். மகிழ்ச்சி

இடபம்: வீட்டில் நெருக்கடி, மனக் குழப்பம், கருத்து மோதல்.

மிதுனம்: சகோதர உதவி கடன் வசூல். தொழில் போட்டி. பயணம்.

கடகம்: ஏமாற்ற பெருமூச்சு. காரிய தடை. அநாவசிய செலவு.

சிம்மம்: பதட்டம், பயணங்களால் தொல்லை, உடல் சோர்வு.

கன்னி: அநாவசியதலையீடு. பணக் கஷ்டம். தெய்வீக செலவு. பீடை.

துலாம்: கற்பனை மிகுதி, காரிய வெற்றி. புதுப்பொருள் சேர்க்கை.

விருச்சிகம்: விவேகமான செயல். அதிகாரிகள்பாராட்டு, குடும்ப மகிழ்ச்சி.

தனுசு: நண்பர்கள் தொல்லை. அடிபணிதல், புத்திரர் சிறப்பு

மகரம்: பணவசதி உற்சாகம். காரிய அலைச்சல். குடும்ப கவலை.

கும்பம்: தொழில் முயற்சி. வாக்கு வன்மை, பணியாள் சகாயம். புகழ்.

மீனம்: வாய்ப்பந்தல், கடித தொல்லை. வைத்திய செலவு. மனச்சுமை.

ஜோஸ்யர்

# யாழ் இளைஞர் துருக்கியில் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் துருக்கியில் மரணமானார்.

இராஜதுரை சுதன் என்பவரே துருக்கி எங்கைப் பகுதியில் வாயு குண்டு வெடிப்பில் அகப்பட்டு மரணமடைந்ததாக தெரியவருகிறது. (ஈ)

# பாதிப்புற்ற ஆசிரியருக்கு முற்பணம் வழங்கவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட இரண்டு வருடச் சம்பள முற்பணம், 1987ல் விமானத்தாக்குதலால் முற்றாக வீடு சேதம் அடைந்து கடும் பாதிப்புற்ற ஆசிரியர்களுக்கு இதுவரை வழங்கப்படாதது குறித்துப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பள முற்பணம் இக் கல்வித் திணைக்களத்தால் இரு தடவைகள் வழங்கப்பட்டதும் இவர்களது விண்ணப்பம் புறக்கணிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (83)

# அமைதிக்காக மகாயாகம்

(உடுவில்)

சனி, குரு ஆகிய கிரகங்கள் ஒரு வீட்டில் இருப்பதால் ஏற்படும் கஷ்டங்கள் குறையவும், நாட்டில் சமாதானம், அமைதி நிலவவேண்டியும் இணுவில் கந்தசாமிகோவிலில் ஒரு மகாயாகம் நடைபெற்றது.

சண்முகஹோமம், லட்சுமி ஹோமம், சனி ஹோமம், உருத்திர ஹோமம், வைரவ ஹோமம் ஆகியன நடைபெற்று யாகம் செய்யப்பட்டது.

பிரம்மஸ்ரீ உருத்திர குருக்கள் தலைமையில் 5 மூர்த்திகளும் 5 குருக்கள்மார் பங்குபற்றி ஹோமத்தையும் யாகத்தையும் நடத்தினர்.

# 46 ஊழியர் ஓய்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் 46 ஊழியர்கள் சுயவிருப்பத்தின் கீழ் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் ஓய்வு பெற்றுள்ளார்கள்.

இதனால் செயலக வேலைகள் பெருமளவில்பாதிப்பு அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [153]

# யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆசிரிய அணிக்கும் மாணவ முதல்வர் அணிக்குமிடையில் நடைபெற்ற 20 ஓவர் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் ஆசிரியர் அணி 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மாணவமுதல்வர் அணி 8ஓவர்களில்சகல விக்கெட்டுகளையும் இழந்து 58 ஓட்டங்களை பெற்றது. ஆசிரியர் அணியில் ரி. சிவகுமாரன் 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

ஆசிரிய அணி 2 விக்கெட் இழப்பிற்கு 60 ஓட்டங்களை பெற்றது. வி. பிரபாகரன் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களை பெற்றார் நடுவர்களாக திரு. பூபாலசிங்கம் செல்வன் ஹரேந்திரன் கடமையாற்றினார். (இ)

# புலிக்கு பயந்த அதிகாரி மீது இராணுவ மன்றில் விசாரணை

[கொழும்பு]

வடபகுதியில் கடமையாற்றும் இராணுவ உயர் அதிகாரி ஒருவருக்கு எதிராக கொழும்பில் இராணுவ நீதி மன்றில் விசாரணை நடைபெற்று வருவதாக 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

லெப். கேர்ணல் தரத்திலுள்ள இந்த அதிகாரி புலிகளின் தாக்குதலுக்குப் பயந்து எந்தவித அறிவித்தலுமின்றி லீவில் சென்றதாகவும், போலி வைத்திய சான்றிதழும் சமர்ப்பித்துமிருந்தாராம்.

இவருக்கு உடலில் எந்தவித கோளாறுமில்லை எனெ இராணுவ வைத்தியர்கள் சான்றிதழ் கொடுத்ததை அடுத்து விசாரணை ஆரம்பமாகியுள்ளது. (சி)

## முன்னாள் எம். பி. காலமானார்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் (57 வயது) த. வி. கூட்டணி நேற்றுக் காலை யாழ். ஆஸ்பத்திரியில் காலமானார்.

அல்வாய் வதிரியைச்சேர்ந்த இவர் சுகவீனம் காரணமாக கடந்த பல நாட்களாக யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்தது தெரிந்ததே. (56)

### வங்காலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கவில்லை.

பிந்திக் கிடைத்த தகவல்களின்படி அதிபர்கள் திரு. எஸ். ரி. ஜோசப்பிள்ளை திரு. நவரட்ணம், திரு. செபமாலை, திரு. விம் டே மா டி யன் குரூஸ். திரு. ஜஸ்டின் ஆயியோரே கொல்லப்பட்டவர்களென்றும் தெரிவிக்கப்படுகிறது. (56)

### இராணுவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லரண் அமைக்க முற்பட்டபோது புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலில் படையினர் தரப்பில பெரும்சேதம் ஏற்பட்டுள்ளது. பெருமளவு ஆயுதங்களும் புலிகளினால் கைப்பற்றப்பட்டது.

திருகோண மலை மாவட்டத்திலிருந்து நேற்றுமுன்தினம் கதிரவெளி, வாகரை, மாங்கேணிபகுதியில் தேடுதலுக்காகச்சென்ற இராணுவத்தினர் மாணிக்கம் என்ற இடத்தில் புலிகள் வைத்த நிலக்கண்ணி வெடியில் சிக்கியதில் நாலு இராணுவத்தினர் தமது கால்களை இழந்தனர்.

படையினர் தரப்பில பெரும்சேதம் ஏற்பட்டுள்ளது. 300-க்கும் அதிகமான படையினர் ரோந்து சென்றபோதே இச்சம்பவம் இடம்பெற்றது. [வி-ச]

## 10 ஏக்கர் வயல் தீயிடப்பட்டது!

(திருமலை)

திருமலையில் பூமரத்தடி சேனையில் பத்து ஏக்கர் நெல்வயலை பயிருடன் சேர்த்து இராணுவம் தீவைத்து கொளுத்தியுள்ளது. கடந்த 10-ம் திகதி இச்சம்பவம் இடம் பெற்றது.

இதேவேளை வயலில் வேலை செய்த 6 தமிழர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டபின் விடுதலை செய்யப்பட்டனர். [வி]

## மலேரியா காய்ச்சல்

[மாங்குளம்]

ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு போன்ற பின்தங்கிய பகுதிகளில் தற்போது மலேரியாக்காய்ச்சல் பரவிவருகிறது.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் மலேரியாவுக்குரிய மருந்துவகைகள், தடுப்பு ஊசிகள் குறைவானபடியால் இப்பகுதி மக்கள் இந்நோயைக் குணப்படுத்தப் பெரிதும் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அங்குள்ள வெளி மாவட்ட அதிகளும் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். (150)

## அரசுக்கு எதிராக இன்று கூட்டம்

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு உயர்வு, ஜனநாயக உரிமைகளை மீண்டும் நிலைநாட்டுதல், ஒடுக்குமுறை, அடக்குமுறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தல் ஆகிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்து 11 எதிர்க் கட்சிகள் இன்று கொழும்பில் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளன.

இக்கூட்டம், எதிர்க் கட்சித் தலைவர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் ஹவ்லக் திடலில் நடைபெறவுள்ளது. (எஸ்)

## பருத்தித்துறை இறங்குதுறை வேலைகள் 1-ம்கட்டம் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுக இறங்குதுறை புனரமைப்பு வேலைகளின் முதலாம் கட்டம் முடிவடைந்துள்ளது. 60 அடி நீளம் மேற்படி திட்டத்தின் கீழ் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

அடுத்த கட்ட 60 அடி நீளமான திட்டம் வெகுவிரைவில் செய்யப்பட்டு முடிவடையுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

புனரமைப்பு வேலைத்திட்டங்கள் முடிவடைந்தால் பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலிருந்து பொருட்களை இறக்குவது இலகுவாக இருக்குமென்று தெரிவிக்கப்படுகிறது. [153]

### படையினரை

(1ம் பக்க தொடர்ச்சி)

உயிர்ச் சேதத்தை ஏற்படுத்துவதுடன், படையினரை உளவியல் ரீதியிலும் பாதித்து வருகிறது.

இதுபற்றி படைத் தளபதிகள் பலரும் குறிப்பிட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

### மட்டு. மாவட்டத்தில்

(1-ம பக்கத் தொடர்ச்சி)

புனர்வாழ்வு, புனர்நிர்மான, நடவடிக்கைகளுக்காக கொல்லப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் இதுவரை 2,800 பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனினும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை இம் மாவட்டத்தில் அதிகமாயிருப்பதாக பொது நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. [சி]

## வீரமரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் கடந்த 13ம் திகதி விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் வீரவேங்கை ஆனந்தராஜ் வீரமரணமடைந்தார்.

விடுதலைப் புலிகள் இவருக்கு தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். (வி-எ)

## எச்சரிக்கை

(பூநகரி)

மன்னார் மாவட்டம், பூநகரி ஆகிய இடங்களில் நிர்ணய விலை காரணமாக தேங்காய் மண்ணெண்ணை போன்ற பொருட்கள்வாடிவடி சந்தைப் பகுதியில் காண முடியாதுள்ளது. எனவே பொருட்களை பதுக்கக் கூடாது என்றும் நிர்ணய விலையை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் விடுதலைப் புலிகள் எச்சரித்துள்ளனர்

## குழந்தைகளுக்கான தடுப்பூசி மருந்துகள் வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்துள்ள 'லிலி' கப்பலில் குழந்தைகளுக்கான தடுப்பூசி மருந்துகள் வந்துள்ளன.

3, 5, 7, 9, 18ம் மாதங்களுக்கான போலியோ தடுப்பு ஊசி மருந்துகள், சுமார் ஆயிரம் குழந்தைகளுக்குப் போடக்கூடிய அளவில் வந்துள்ளன.

இந்த ஊசி மருந்துகள் யாவும் சில மாதங்களாக இல்லாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது. இவ்வூசி மருந்துகளை வெளி நோயாளர் குழந்தைகள் பகுதியில் இன்று முதல் போட்டுக்கொள்ளலாம். (56)

### தமிழ்க்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லும் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

கடந்தவாரம் இவ்விருவரையும் தமிழ்க்குழுக்களைச் சேர்ந்தவர்கள் புதுடில்லியில் சந்தித்தபோது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டதாம். (சி)

### மாகாண சபைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபைகளை கலைக்கும் அதிகாரம் கொண்ட ஷரத்துக்களை ரத்துச்செய்யுமாறு தமிழ்-முஸ்லிம் கட்சிகள் அரசைக் கோரியுள்ளன. இது பற்றித் தொடர்ந்தும் பேச்சுக்கள் நடைபெற்றுவருகின்றன.

இந்த ஷரத்து நீக்கப்பட்டால் இந்தியாவிலிருந்து திரு. வரதராஜப்பெருமாள் இங்கு வந்து முதலமைச்சர் பதவியேற்பார் என்றும் அரசிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். [சி]

## க. பொ. த. உயர்தரம் மாணவர் விண்ணப்பிக்கலாம்

[யாழ்ப்பாணம்]

"1990-ம் ஆண்டு ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சை எடுக்காத மாணவர்கள் 1991-ம் ஆண்டுக்கு விண்ணப்பிப்பதற்கு 1991-ம் ஆண்டு விண்ணப்ப முடிவு திகதியை நீடிக்குமாறு கல்வி அமைச்சைக் கேட்டுள்ளேன்."

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஜி. ஸி. ஈ. 1990-ம் ஆண்டுப் பரீட்சை நடத்துவதற்கு கல்வி அமைச்சு இணங்கியுள்ள போதும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இல்லாமல் பரீட்சை நடத்த இயலாது. இதை கருத்தில் கொண்டுதான் விண்ணப்ப முடிவு திகதியை நீடிக்குமாறு கேட்டுள்ளேன் என்றார். (152)

## தாய்வானில் இருந்து இலங்கையர் வெளியேற்றம்

[பூநகரி]

தாய்வானில் உள்ள இலங்கையர் உட்பட சகல வெளிநாட்டவரையும் இம்மாதம் 28-ம் திகதிக்கு முன் வெளியேறுமாறு தாய்வான் அரசு கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன் காரணமாக தாய்வானில் இருந்து வேறுநாடுகளுக்கும் செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

தாய்வானில் தொழில் புரிந்த பூநகரியைச் சேர்ந்த மூன்று பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள் 14 மாதங்களாக தாய்வானில் தொழில் புரிந்தவர்களாம். (23)

## உபகுழு நியமனம்

(சென்னை)

1964ம் ஆண்டு சிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய வம்சாவழி மக்களின் பிரச்சனை குறித்து ஆராய்வதற்கென ஒரு உப குழுவை இலங்கை அரசு நியமித்துள்ளது என்று கிராமிய அபிவிருத்தி, உல்லாசபயணத்துறை அமைச்சர் திரு. தொண்டமான் மதுரையில் பத்திரிகையாளர்களிடம்தெரிவித்துள்ளார். (அ)

## 60 முஸ்லிம் குடும்பம் தமிழ்ப் பகுதியில் அமர்வு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் புதிய குடியேற்ற வீடமைப்பு அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படத் தொடங்கியுள்ளன.

இவற்றில் 'ஜமாலியா' திட்டம் மிகப்பிரசித்தி பெற்றது. இவற்றில் 60 முஸ்லிம் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

மேற்படி இடங்கள் அனைத்தும் முன்னர் தமிழ் மக்களுக்குச் சொந்தமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. [வி]

## 'ஏ நெகடிவ்' ரத்தம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு 'ஏ நெகடிவ்' இரத்தம் உடனடியாகத் தேவைப்படுகிறது. இரத்த வங்கியுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் படுகிறார்கள்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100305/81.